**நவம்பர் – 07**

# TNPSC துளிகள்

- இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை முறையே 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான இரண்டு ஆண்டு காலத்திற்குச் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியின் (ISA) தலைமை மற்றும் இணைத் தலைமைப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய நிலக்கரி நிறுவனமானது (CIL) நவம்பர் 01 ஆம் தேதியன்று கொல்கத்தாவில் உள்ள அதன் தலைமையகத்தில் அதன் 50வது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடியது.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) 352வது ஆளுகைக் குழு கூட்டம் ஆனது ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.
- கோலின்ஸ் அகராதியானது அதன் 2024 ஆம் ஆண்டின் சிறந்தச் சொல்லாக "brat" (summer-living ideal என்று பெயர் மாற்றப்பட்ட இசைத் தொகுப்பின் தலைப்பு) என்ற சொல்லினை அறிவித்துள்ளது.
- தென் கொரியக் குடியரசின் யாங் ஜி-இன் மற்றும் சீனாவின் லியு யுகுன் ஆகியோர் ISSF அமைப்பின் 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்தத் தடகள வீரருக்கான விருதைப் பெற்று உள்ளனர்.
- DBS பாங்க் இந்தியா ஆனது, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக (BCWI) தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## RC மோரிஸ் அறிக்கை மற்றும் வரகு அரிசி




- பந்தவ்கர் புலிகள் வளங்காப்பகத்தில் 72 மணி நேரத்திற்குள் 10 யானைகள் மர்மமான முறையில் உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்திய போது, மத்தியப் பிரதேச வனத் துறை அதிகாரிகள் RC மோரிஸ் அறிக்கையினைக் கண்டறிந்துள்ளனர்.

- இது தமிழ்நாட்டின் வண்ணாத்திப்பாறை காப்புக்காட்டில் 14 யானைகள் உயிரிழந்தது பற்றிய விவரங்களைக் கொண்ட 1934 ஆம் ஆண்டு மே 22 என்று தேதியிட்ட சுமார் 90 ஆண்டுகள் பழமையான அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையில் யானைகளின் உயிரிழப்பிற்கு உள்ளூரில் 'வரகு' என்று அழைக்கப் படும் கோடோ வகை சிறு தானியத்தினை உட்கொண்டதே காரணம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.
- இதற்கான மாற்று மருந்தாக அதிக அளவில் புளி தண்ணீர் அல்லது மோர் வழங்கப் படலாம் என்று நம்பப்படுகிறது.
- இந்தச் சம்பவம் ஆனது 1933 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று நிகழ்ந்தது.
- அதே வகை சிறு தானியமானது தற்போது மத்தியப் பிரதேசத்தின் பந்தவ்கரில் நடந்த யானைகளின் உயிரிழப்புகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

## தமிழ்நாட்டில் சீமையகத்தி



- அடுத்த 12 மாதங்களுக்குள் மாநிலத்தின் காடுகளில் இருந்து ஊடுருவல் வகைகளைச் செடிகளில் ஒன்றான சீமையகத்திகள் (சென்னா ஸ்பெக்டபிலிஸ்) அகற்றப்படும் என தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- இது தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவிலிருந்துப் பெறப்பட்டு, அதன் பின்பு நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் (NBR) அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது வேகமாக குறிப்பாக ஆழமான மண்ணில், வளரும் இனமாகும். நெருப்பு மற்றும் கரையான் எதிர்ப்புத் திறன் கொண்டது மற்றும் அதிக அமிலத் தன்மைக் கொண்ட மண்ணிலும் வளரக் கூடியது.
- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தமிழ்நாடு ஊடுருவல் வகை தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு (TNPIPER) நிபுணர்கள் வனப் பகுதிகளில் 196 அயல்நாட்டு ஊடுருவல் வகை தாவர இனங்களைக் கண்டறிந்தனர் என்ற நிலையில் அவற்றில் 23 இனங்கள் 'முன்னுரிமை பெற்ற ஊடுருவல் இனங்கள் ஆகும்'.

# தேசியச் செய்திகள்

## First in the World சவால்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), "First in the World" என்ற புதியதொரு முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.

- இது சிக்கலான உடல்நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான புதுமையான கருத்தாக்கங்களை உருவாக்குவதற்கு இந்திய அறிவியலாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'அறிவு மேம்பாடு' அல்லது 'செயல்முறை சார் புத்தாக்கம்' ஆகியவற்றை இலக்காகக் கொண்ட முன்மொழிவுகள் இந்தத் திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படாது.

INDIAN COUNCIL OF MEDICAL RESEARCH
Serving the nation since 1911

## DICSC திட்டம்







- உத்தரப்பிரதேசத்தின் பிலிபித் மற்றும் கோரக்பூரில் எண்ணிம இந்தியா பொது சேவை மையத் (DICSC) திட்டத்தினை மத்திய அரசானது தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, அந்த மாநிலத்தின் 10 மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கிராமப் பஞ்சாயத்துகளிலும் ஒரு மாதிரி DICSC மையத்தை நிறுவும் என்பதோடு நாடு முழுவதும் மொத்தம் 4,740 மையங்கள் நிறுவப்படும்.
- இந்த மையங்களின் செயலாக்கம் மற்றும் மையப்படுத்தப்பட்ட ஒரு தொழில்நுட்பக் கண்காணிப்பு ஆனது CSC e-Governance Services India Limited என்ற நிறுவனத்தினால் நிர்வகிக்கப் படும்.
- இது கிராமப்புறக் குடிமக்களுக்கு நிதி மற்றும் வணிகச் சேவைகளுடன் கூடிய மிகவும் அத்தியாவசிய மின்-ஆளுகைச் சேவைகளை வழங்கும் ஒரு ஒருங்கிணைந்த தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசியப் பல்லுயிர்ப் பெருக்க உத்தி மற்றும் செயல் திட்டம்

- இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசியப் பல்லுயிர்ப்பெருக்க உத்தி மற்றும் செயல்

திட்டம் (NBSAP) ஆனது கொலம்பியாவில் நடைபெற்ற 16வது பங்குதாரர்கள் மாநாட்டின் (COP 16) போது வெளியிடப் பட்டது.

- 2050 ஆம் ஆண்டிற்குள் இயற்கையோடு இயைந்து வாழ வேண்டும் என்ற நீண்ட காலக் கண்ணோட்டத்துடன், 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர்ப் பெருக்க இழப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான உத்திகளைக் கையாள்வதற்கான ஒரு முக்கிய செயல் திட்டமாகும்.
- இந்தியாவானது தனது NBSAP திட்டத்தினைப் புதுப்பித்து, அதனுள் 'ஒட்டு மொத்த அரசு முகமைகளின் ஈடுபாடு' மற்றும் 'ஒட்டு மொத்த சமூக அமைப்புகளின் ஈடுபாடு' ஆகிய அணுகுமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தியா தனது நிலப்பரப்பு, நீர் நிலைகள் மற்றும் கடலோர மற்றும் கடல் பகுதிகளில் குறைந்தபட்சம் சுமார் 30% பகுதிகளைப் பாதுகாப்பதற்கு உறுதி பூண்டுள்ளதோடு பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த பகுதிகளின் இழப்பு எண்ணிக்கையானது 2030 ஆம் ஆண்டிற்குள் பூஜ்ஜியத்தினை எட்டும் நிலையில் உள்ளது.
- 17 மாபெரும் பல்லுயிர்ப் பெருக்கம் கொண்ட நாடுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட இந்தியா, 1994 ஆம் ஆண்டில் பல்லுயிர்ப் பெருக்கம் மீதான உடன்படிக்கையின் ஒரு உறுப்பினராக மாறியது.
- இது உலக நிலப்பரப்பில் வெறும் 2.4 சதவீதப் பகுதிகளுக்குள் உலகில் பதிவு செய்யப் பட்ட உயிரினங்களில் 7-8% ஆனது இந்தியாவில் காணப்படுகிறது.
- இந்தியா 55,000க்கும் மேற்பட்ட தாவர வகைகளையும் 100,000க்கும் மேற்பட்ட விலங்கு இனங்களையும் கொண்டுள்ளது.
- முதல் NBSAP ஆனது 1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.




## சர்வதேசச் செய்திகள்

### ARIN-AP


- அமலாக்க இயக்குநரகத்தினை (ED) கொண்டு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இந்தியா, சொத்து மீட்பு தொடர்பான முகமைகளுக்கிடையிலான வலையமைப்பு-ஆசிய பசிபிக் (ARIN-AP) அமைப்பின் வழிக்காட்டுதல் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பல்வேறு குற்ற வழக்குகளைக் கையாள்வதற்காக அர்ப்பணிக்கப் பட்ட ஒரு முக்கியப் பல்-முகமை வலையமைப்பு மற்றும் உலகளாவிய CARIN வலையமைப்பின் உறுப்பினராக உள்ள ஒரு அமைப்பாகும்.
- இந்தியா இந்த வலையமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று, 2026 ஆம் ஆண்டில்

வருடாந்திரப் பொதுக் கூட்டத்தினை (AGM) நடத்தும்.

- ARIN-AP ஆனது சொத்துக் கண்டுபிடிப்பு, முடக்கம் மற்றும் பறிமுதல் ஆகியவற்றில் எல்லை கடந்த ஒத்துழைப்பை எளிதாக்குவதற்காக நிறுவப்பட்டது.
- இது 28 உறுப்பினர் நாடுகள் மற்றும் ஒன்பது பார்வையாளர் நாடுகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதோடு CARIN வலையமைப்பின் ஒரு பகுதியாக ஒரு முறைசாரா மற்றும் வலுவான வலையமைப்பாகச் செயல்படுகிறது.




## ஸ்பெயினில் ஏற்பட்ட திடீர் வெள்ளம்




- ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரமானது தொடர்மழையால் பெரு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளது.
- இந்த வெள்ளம் ஆனது டானா நிகழ்வால், அதாவது சூடான, ஈரமானக் காற்று குளிர்ந்த காற்றைச் சந்திக்கும் போது, நிலையற்ற வானிலை அமைப்பை உருவாக்குகின்ற ஒரு நிகழ்வால் ஏற்பட்டது.
- போர்ச்சுகலில் 1967 ஆம் ஆண்டில் குறைந்தது சுமார் 500 பேர் உயிரிழந்ததற்குப் பிறகு,

ஐரோப்பாவில் மிக மோசமான வெள்ளம் தொடர்பாக பதிவான பேரழிவு இதுவாகும்.

- ஸ்பெயின் நாடானது 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் நீடித்த வறட்சியை எதிர் கொண்ட பிறகு இந்தத் தீவிர வானிலை நிகழ்வு ஏற்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## அனலாக் விண்வெளித் திட்டம் - லே

- இஸ்ரோ நிறுவனமானது, இந்தியாவின் முதல் அனலாக் என்ற விண்வெளி திட்டத்தின் பணிகளை லடாக்கில் உள்ள லேயில் தொடங்கியுள்ளதோடு இது விண்வெளியில் உள்ளது போன்ற சூழலை புவியில் உருவகப்படுத்தும் ஒரு திட்டமாகும்.
- எதிர்காலத்தில் நிலவிற்கு மனிதனை அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளதால் இந்த நடவடிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.
- அனலாக் விண்வெளித் திட்டம் என்பது பூமியில் உள்ள சில இடங்களில் கடினமான விண்வெளிச் சூழல்களுக்கான இயற்பியல் ஒற்றுமைகளை மிக நன்கு கொண்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் களச் சோதனைகள் ஆகும்.
- விண்வெளிப் பயண ஆராய்ச்சிக்கான சிக்கலைத் தீர்ப்பதிலும் இது குறிப்பிடத்தக்கப் பங்கு வகிக்கிறது.




## ஒளிரும் நுண் பொருட்கள்

- நுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (INST) ஆனது, ஒளிரும் நுண் பொருட்களைப் பயன்படுத்தி ஒரு புதியப் பாதுகாப்பு மையை உருவாக்கியுள்ளது.
- இது நாணயம், சான்றிதழ்கள், உயர்தர தயாரிப்புப் பொருட்கள் மற்றும் மருந்துகளில் போலிகளை தடுப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மை என்பது பல்வேறு ஒளி அலைநீளங்களின் கீழ் வெவ்வேறு வண்ணங்களை வெளிப்படுத்துவதால், அது மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.
- இதன் உருவாக்கச் செயல்முறையானது சில அருமண் தனிமங்கள் பொருத்தப்பட்ட


கண்ணாடி வார்ப்பு மற்றும் ஒரு இணைக் கலப்பு முறையை உள்ளடக்கியதோடு இது பல்வேறு சூழல்களில் இந்த மை பயன் மிக்கதாக இருக்க வழி வகுக்கிறது.

- இந்தக் கண்டுபிடிப்பானது, அதன் நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கும் சில போலி தயாரிப்புகளைத் தடுப்பதற்குமான நம்பகமான தீர்வை வழங்குகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இமயமலைப் பனிப்பாறை ஏரிகளின் எழுச்சி




- இமயமலைப் பனிப்பாறை ஏரிகள் வேகமாக விரிவடைந்து, சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு அதிகரித்து வரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.
- 2011 முதல் 2024 ஆம் ஆண்டு வரை, இந்த ஏரிகள் பரப்பளவில் 10.81% விரிவடைந்தன என்பதோடு இது பெரும்பாலும் பருவநிலை மாற்றத்தினால் உந்தப்பட்டது.
- இந்திய நிலப்பரப்பு பக்கம் அமைந்த பனிப்பாறை ஏரிகள் அதே காலகட்டத்தில் 33.7% விரிவடைந்துள்ளன.
- இந்தியாவில் மட்டும் 67 ஏரிகள் அளவில் 40 சதவீதத்திற்கும் அதிகமாக விரிவடைந்து உள்ள நிலையில் இது அவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அபாயம் மிகவும் அதிகமாக உள்ளதைக் குறிக்கிறது.
- இந்தியாவில் 2011 ஆம் ஆண்டில் தோராயமாக 1,962 ஹெக்டேராக இருந்த பனிப்பாறை ஏரிகளின் பரவலானது, 2024 ஆம் ஆண்டில் 2,623 ஹெக்டேராக விரிவடைந்தது.

- ஒட்டு மொத்த இமயமலைத் தொடர் முழுவதும், 2011 ஆம் ஆண்டில் சுமார் 533,401 ஹெக்டேராக இருந்த பனிப்பாறை ஏரிகளின் பரப்பளவு ஆனது 2024 ஆம் ஆண்டில் 591,108 ஹெக்டேராக விரிவடைந்தது.

# மாநிலச் செய்திகள்

## தாடு பழங்குடியினர் - 10 அம்ச அறிவிப்பு

- மணிப்பூரில் நிலவும் இன நெருக்கடிக்கு மத்தியில் அந்தப் பழங்குடியினரின் பெரும் தனித்துவமான அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்காக தாடு என்ற பழங்குடியினர் 10 அம்சப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.
- அசாம், மிசோரம் மற்றும் நாகாலாந்தில் உள்ள தாடு பழங்குடியினரை ஒரு தனி மற்றும் தனித்துவமானப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினராக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க தாடு மாநாடு ஒப்புக் கொண்டது.
- இந்தப் பிரகடனத்தின்படி, தாடு என்பது குக்கி இனமல்ல அல்லது குக்கி இனத்திற்கு உட்பட்டதுமல்ல, அல்லது குக்கியின் ஒரு பகுதியும் அல்ல, ஆனால் குக்கி இனத்தில் இருந்து அது முற்றிலும் தனிப்பட்டது மற்றும் சுதந்திரமானதாகும்.
- தாடு இனத்தவர் இந்தியாவின் மணிப்பூரின் 29 பூர்வீக/பூர்வீகப் பழங்குடியினங்களில் ஒன்றாவர்.
- 1881 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இருந்து 2011 ஆம் ஆண்டின் சமீபத்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வரையில் மணிப்பூரில் சுமார் 2,15,913 தாடு சமூகத்தினர் இருப்பதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளதையடுத்து, மணிப்பூரில் மிகப்பெரிய எண்ணிக்கையிலான பழங்குடியினராக இந்த இனமானது திகழ்ந்து வருகிறது.
- எனி இன குக்கி பழங்குடியினர் (AKT) 2011 ஆம் ஆண்டின் சமீபத்திய மணிப்பூர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சுமார் 28,342 எண்ணிக்கையினைக் கொண்டிருந்தனர் என்ற நிலையில் குக்கி இனம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப் பட்டு உள்ளது இது முதன்முறையாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★